சுருக்கம்

வணிகவரித் துறை -அறிவிப்புகள் -2011–ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சரின் பதிலுரை - தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கும் குடும்ப நல நிதி உதவி ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தி வழங்குதல் -ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை

அரசாணை (நிலை) எண்.44

நாள் 28.02.2011
மாசி 16,
திருவள்ளுவராண்டு, 2042,

படிக்கவும்:-

1. அரசாணை (2டி) எண். 96, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 02.07.2007
2. கூடுதல் ஆணையர் (வ.வ) / முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வணிகர் நலவாரியம், கடித எண்.வநவா/34-2/2011, நாள் 21.01.2011.
3. அரசாணை (நிலை) எண்.43 வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 28.02.2011

-----

ஆணை:-

2011 –ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் தமது பதிலுரையில், "தமிழ்நாடு வணிகர் நலவாரிய உறுப்பினர்கள் உயிரிழக்க நேரிடும் பட்சத்தில் அவர்களது குடும்பத்திற்கு மேற்படி வாரியத்தால் வழங்கப்படும் நிவாரணத் தொகை தற்பொழுதுள்ள ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தி வழங்கலாம்" என அறிவிப்பு செய்தார்.

2. மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்படி அறிவிப்புகளில் "விற்பனை மதிப்பு அளவு (Turn over) உச்ச வரம்பின்றி, பாதையோர வணிகர்கள் தவிர்த்து, சிறு வணிகர்கள் உட்பட அனைத்து வணிகர்களையும் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் அறிவிப்பு செய்தார்.

3. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு குடும்ப நல உதவி ரூ.20,000/-லிருந்து ரூ.50,000/-மாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது.

4. தற்போது, தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு குடும்ப நல நிதியுதவியை உயர்த்தி வழங்குவது குறித்து கூடுதல் ஆணையர் (வணிகவரி)/முதன்மைச் செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது. முதன்மைச் செயல் அலுவலர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள தமது அறிக்கையில், முந்தைய ஆண்டுகளில் குடும்ப நல உதவித் தொகை ரூ.5,000/–லிருந்து வழங்கப்பட்டு வந்த அத்தொகை ரூ.50,000/–வரை உயர்த்தப்பட்டது என்றும், குடும்ப நல உதவி கோரி பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் கணிசமாக உயர்ந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.50,000/- என்ற அளவில் நிதியுதவி வழங்கப்படும் நேர்வில் 2011-ஆம் ஆண்டு மட்டும் சுமார் ரூ.25,00,000/- தேவைப்படும் என்பதையும் முதன்மைச் செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

5. மேலும், பாதையோர வணிகர்களை தவிர்த்து, சிறு வணிகர்கள் உட்பட அனைத்து வணிகர்களையும் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கும் பட்சத்தில் 2011-ஆம் ஆண்டு மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளில் ரூ.25,00,000/-ஐ விடவும் அதிகமாகும் என தெரிகிறது. மேலும், 08.06.2010 அன்று நடைபெற்ற 12–வது வாரியக் கூட்டத்தில் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர் மறைவுக்கு பின்னர் வாரிய உறுப்பினரால் நியமனம் செய்யப்படும் குடும்ப உறுப்பினருக்கு குடும்ப நல உதவியினை நேரடியாக வழங்கலாம் என தீர்மானம் எண். 4–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

6. 1989 - ஆம் ஆண்டு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்ட போது, அவ்வாரியத்திற்கு அரசு ரூ.2 கோடி மானியமாக வழங்கியது. அத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி மற்றும் ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் உறுப்பினர் சேர்க்கைக் கட்டணம் மற்றும் அதற்கிணையாக அரசு அளிக்கும் மானியம் ஆகிய தொகையிலிருந்து வாரியத்தின் செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில், தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அதன் உறுப்பினர்கள் இறக்க நேரிடும் பட்சத்தில் அவர்களது குடும்பத்திற்கு நிவாரணமாக வழங்கப்படும் குடும்ப நல உதவித் தொகையினை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/–ஆக உயர்த்தி வழங்கலாம் என தமிழ்நாடு வணிகர் நல வாரிய முதன்மைச் செயல் அலுவலர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேற்கூறியுள்ள சூழ்நிலையில், முதன்மைச் செயல் அலுவலரின் பரிந்துரையை ஏற்று, உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக வணிகர் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.100/- வசூலிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு வணிகர் நலவாரிய உறுப்பினர்கள் உயிரிழக்க நேரிடும் பட்சத்தில் அவர்களது குடும்பத்திற்கு மேற்படி வாரியத்தால் நிவாரணமாக வழங்கப்படும் குடும்ப நல உதவித் தொகையினை தற்பொழுதுள்ள ரூ.50,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தி வழங்கலாம் என முடிவு செய்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 74/இ.செ/வருவாய்/2011, நாள் 18.02.2011ல் பெறப்பட்ட அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு செயலாளர்.

பெறுநர்
வணிகவரி ஆணையர், சென்னை -5.
கூடுதல் ஆணையர்(வணிகவரி) /முதன்மைச் செயல் அலுவலர்,
தமிழ் நாடு வணிகர் நல வாரியம், சென்னை -5.
<u>நகல்:-</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை -2
துணை முதலமைச்சர் அலுவலகம்,சென்னை -2.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -2.
வணிகவரித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை -2.
நிதித்துறை, சென்னை -9.
இயக்குநர், தமிழ் வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தி துறை, சென்னை -9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
28/2/11